5.3.2021
அசல் வழக்கு எண்:77-2014

பி.வா.சா.1 குருசாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை
(5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை).

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். நான் எனக்காகவும், 2 முதல் 4, 6,7 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2 முதல் 4,6,7 பிரதிவாதிகள் அவர்களுக்காக இந்தவழக்கில் என்னை சாட்சியம் அளிக்க எழுத்து பூர்வமான அதிகாரம் அளித்துள்ளார்கள் என்றால் இல்லை. 2 முதல் 4,6,7 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகும் நிலையில் உள்ளனர் என்றால் சரிதான். தாவாச்சொத்தின் பகுதியில் மேரி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக பி.வா.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரிதான். பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ,2 கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்கள் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 கிரைய ஆவணங்களின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. அசல் கிரைய ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு காரணங்கள் சொல்லாததால் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. பெத்தன மூப்பர் என்பவர் சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து என் முன் சுவான்தாரரான மேரி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேரி என்பவர் 4ம் நம்பர் பிளாட்டை கிரையம் பெற்றதாக கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெத்தன மூப்பர் சொத்துக்களை பல பிளாட்டுகளாக பிரித்ததற்கான ஆவணமோ, வரைபட அனுமதியோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிளாட்டுகள் பிரித்தது உரிய அங்கீகாரம் பெறாமல் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானோ, மேரியோ கிரையம் பெற்ற பிளாட் எண்.4-யை தனியாக உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற்று கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது பெயரிலான தனிப்பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உட்பிரிவு செய்து நான் தனிப்பட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல. பெத்தன மூப்பருக்கும், மேரிக்கும் மற்றும் எனக்கும் தாவாச்சொத்தை பொறுத்து எவ்வித உரிமை மூலமும் இல்லாததால்தான் கிரையம் பெற்ற சொத்தினை தனியாக உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பெத்தன மூப்பருக்கு தாவாச்சொத்தினை கிரையம் செய்து கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பெத்தன மூப்பர் பெயரிலான கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3

வீட்டு வரி ரசீது வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்றால் சரிதான். வழக்கிற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்யல. பி.வா.சா.ஆ.4 மின் கட்டண ரசீதில் தாவாச்சொத்தின் புல எண்ணோ, வீட்டின் கதவு எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்தில் பெத்தன மூப்பருக்க எந்த காலத்திலும் எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்றும் வாதிகளுக்கும், அவர்களது முன் பாத்தியஸ்தர்களுக்கும் தான் தாவாச்சொத்து பாத்தியப்பட்டது என்றால்சரியல்ல. தாவாச்சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாத பெத்தன மூப்பர் மோசடியாக எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் உரிமை இல்லாத பெத்தன மூப்பர் பல்வேறு நபர்களுக்கு மோசடியாக கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளதால் மேற்படி கிரைய ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பெத்தன மூப்பர் பெயரிலான பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் பெத்தன மூப்பருக்கு பாத்தியம் இல்லாததை நான் தெரியாமல் கிரையம் பெற்றுள்ளேன் என்றும் தாவாச்சொத்தில் எவ்வித பாத்தியமும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.